# சட்டம்

## 2014–2015

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண் 33


## எஸ்.பி.வேலுமணி,

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.


சட்டத் துறை

# கோரிக்கை எண் 33

# சட்டத்துறை

## 2014–2015 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு


| *வரிசை எண்* | *பொருள்* | *பக்க எண்* |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | சட்டக் கல்வி | 5 |
| 3. | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் | 10 |
| 4. | தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி | 14 |
| 5. | சான்றுறுதி அலுவலர்கள் | 16 |
| 6. | ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு | 16 |
| 7. | மாநில சட்ட ஆணையம் | 19 |
| 8. | 2014–2015ஆம் ஆண்டிற்கான பகுதி–II (புதிய) திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல் | 23 |

## 2014–2015ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

## கோரிக்கை எண்.33 சட்டத் துறை

### முன்னுரை

'சட்டம்' சமுதாயத்தின் அடிப்படை கோட்பாடாகும். சமுதாயம் அதனைச் சார்ந்திருக்கிறது. 'சட்டம்' சமுதாயத்தில் ஏற்படும் மாற்றத்திற்கான கருவியாகும். சட்டமானது, ஒரு குறிப்பிட்ட காலத்தின் முக்கியமான அமைப்பாக, அப்போதைய தேவைகள் மற்றும் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு, நாகரீகமடைந்த ஒவ்வொரு சமுதாயத்தின் இறுதியான இலக்காக விளங்குகிறது. சட்டம், நாகரீக வளர்ச்சியடைந்த நாட்டின் மக்களை ஆளுமை செய்வதற்காக அவர்களைக் கட்டுப்படுத்துகிறது. மேலும், சட்டமானது வல்லமையான அரசால் மக்களின் சார்பாக இயற்றப்படுகிறது.

சட்டம், ஒன்று நேரடியாக சட்ட மன்றத்தின் வாயிலாகவோ அல்லது சட்டமியற்றும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டதன்படியான அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகள் வாயிலாகவோ இயற்றப்படலாம்.

சட்டத்துறை நேரடியாக சட்ட மன்றத்தினால் இயற்றப்படும் சட்டம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகளால் வகுக்கப்படும் விதிகள் ஆகிய இரண்டு வகையான சட்டங்களை இயற்றுவதிலும் முக்கியப் பணியாற்றுகிறது.

அரசின் கொள்கை முடிவைச் சட்டமாக்க வேண்டும் என்று முடிவு செய்யும் சமயத்தில், சட்டத்துறை, தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கை முடிவுகளுக்கு சட்டவடிவமளித்து சட்டமுன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டப்பேரவை சட்ட முன்வடிவிற்கு ஒப்புதல் அளித்த பின்பு, ஆளுநரின் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னர், அது சட்டமாகும் வரையில், சட்டத்துறையின் பணி தொடர்கிறது. சட்டப்பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும், சட்டமியற்றுவதற்கான அவசரத் தேவை ஏற்படுகிறவிடத்து, அரசமைப்பின் 213–ஆம் உறுப்பின்படி அவசரச் சட்டத்தை உருவாக்கி வெளியிடுகிறது. சட்டத்துறையின் பணி, அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப உருவாக்கி அதனை பிரகடனப்படுத்தும் வரையில் தொடர்கிறது.

மேலும், சட்டத்துறையின் முக்கியப் பணியானது, சட்டப் பேரவைச் செயலகம் உள்ளடங்கலான தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சனை தொடர்பாக

ஆலோசனை வழங்குவதாகும். சட்டத்துறையானது, தனக்குக் குறித்தனுப்பப்பட்ட பிரச்சனைகளின் பேரில் ஆலோசனை வழங்கி வருகிறது.

மாநில அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத்துறையினால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன. இவை தவிர, மாநில அரசு ஒரு தரப்பினராக உள்ள ஆவணங்கள் அனைத்தையும் சட்டத்துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது. மேலும், பின்வருவன தொடர்பான நிர்வாகப் பணிகளையும் சட்டத்துறை செய்து வருகிறது:-

- சட்டக் கல்வி
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

- தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி
- சான்றுறுதி அலுவலர்கள்
- ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு
- மாநில சட்ட ஆணையம்

**<u>சட்டக் கல்வி</u>**

சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் சட்டக் கல்வித் துறையானது தமிழ்நாட்டில் 1953ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை தோற்றுவிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மேன்மேலும் முன்னேற்றமடைய இத்துறை தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக்

கல்லூரி **1974**ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. **1979–80** ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயமுத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. **1996–97**ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரி அரசு சட்டக் கல்லூரியாக டிசம்பர் **2006**–இல் அறிவிக்கப்பட்டது. **2008–2009**ஆம் ஆண்டு முதல் வேலூரில் மற்றுமொரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தற்போது மாநிலத்தில் ஏழு அரசு சட்டக் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன.

**2013–2014**ஆவது கல்வியாண்டில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன:-

| வ.எண் | சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை–104. (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் சட்ட இளநிலைப்படிப்புகள் மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 2308 |
| 2. | அரசு சட்டக் கல்லூரி, மதுரை (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் சட்ட இளநிலைப்படிப்புகள் மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1433 |
| 3. | அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் சட்ட இளநிலைப்படிப்புகள் மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1435 |
| 4. | அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர். (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் சட்ட இளநிலைப்படிப்புகள் மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1435 |

| | | |
|---|---|---|
| 5. | அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி. (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் சட்ட இளநிலைப்படிப்புகள் மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1435 |
| 6. | அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு. (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் இளநிலை சட்டப் படிப்புகள்) | 1040 |
| 7. | அரசு சட்டக் கல்லூரி, வேலூர் (மூன்றாண்டுகள் இளநிலை சட்டப் படிப்பு) | 240 |

அரசு சட்டக் கல்லூரிகள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை, கோயமுத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயற்பட்டு வரும் அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் தனித்தனியாக விடுதி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி மற்றும்

செங்கல்பட்டு ஆகிய இடங்களில் செயற்பட்டு வரும் அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவியருக்கு மட்டும் விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் செயற்பட்டு வரும் அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர்கள் சட்டத்தைத் தமிழில் பயிலுவதற்கேதுவாக, தமிழில் சட்டப் புத்தகங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பாடத் திட்டத்திலுள்ள அனைத்து சட்டப் பாடங்களுக்கும் தமிழில் புத்தகங்கள் எழுதி முடிக்கப்பட்டு மொத்தம் **32** பாடங்களுள் **27** பாடங்களுக்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் தமிழில் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## <u>தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்</u>

சட்டக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலமாக சட்டம் பயிலும் மாணவர்கள் இன்றைய போட்டிகள் நிறைந்த உலகில் வேரூன்றி நிற்பதற்காக சட்டக் கல்விக்கென தமிழ்நாட்டில் 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், மாநில சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டது. மேலும், தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது திகழ்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டக் கல்லூரிகளையும் இப்பல்கலைக்கழகம் தன்னகத்தே ஒருங்கிணைத்து செயற்பட்டு வருவதால், சட்டக் கல்வியின் தரம் மேம்பட்டு வருகிறது.

சட்டம் மற்றும் சட்டத்தோடு மிக நெருங்கிய தொடர்புடைய பாடங்களில் புதிதாக பணியமர்த்தப்பட்ட

ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, தென்னிந்தியாவில் தரம் வாய்ந்த பயிற்சி மையம் இல்லாத நிலையில், பணிமேம்பாட்டுத் திட்டத்தின் பலனை பெறுவதற்குத் தேவையான செயலாக்க மற்றும் புத்தாக்கப் பயிற்சிகளில் புதிய ஆசிரியர்கள் கலந்து கொள்வதற்கு ஏதுவாக, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திலேயே, ஆசிரியர் பயிற்றுவிப்பு கல்லூரி அமைப்பதற்கான கருத்துரு புதுடெல்லி, பல்கலைக்கழக மானியக்குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு, பெருங்குடி – கொட்டிவாக்கம் கிராமத்தில், தரமணி தொடர்வண்டி நிலையத்திற்கு மிக அருகில், 15 ஏக்கர் நிலம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழக அரசானது, முழுமையான வளாகக் கட்டடம் அங்கு கட்டுவதற்கு ரூ.59.27 கோடியினை இப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளது. மேலும் அவ்வளாக

கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அப்பணிகள் 2015ஆம் ஆண்டு ஜுன் மாதம் முடிவுற்று, 2015–16ஆம் கல்வியாண்டு முதல் இப்புது வளாகத்தில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் செயல்படத் துவங்கும்.

பொதுமக்களுக்கு சட்ட அறிவினை ஏற்படுத்துவதற்காக, முறையான உள்ளமைப்புடன் கூடிய சட்ட அறிவு செயல்முறை மையம் ஒன்றினை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. இதற்கு தமிழக அரசானது ரூ.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு அளித்துள்ளது.

குற்றவியல் சட்டப்பாடம் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் தடயவியல் ஆய்வுக்கூடம் ஒன்றினை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் நிறுவ தமிழக அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம், 16 தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும்,

நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, கல்வி, பயிற்சி, சட்டம், நீதி, சமூக முன்னேற்றம் மற்றும் அவைகளோடு தொடர்புடைய பாடங்களில் ஆராய்ச்சி மற்றும் ஆசிரியர்கள் பயிற்சியாளர்கள் பரிவர்த்தனை போன்றவைகளில் மற்ற உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு அளிப்பதன் மூலமாக தன்னுடைய செயல்பாடுகளை விரிவாக்கம் செய்கிறது. இப்பல்கலைக்கழகம் கீழ்க்காணும் நிறுவனங்களுடன் சமீபகாலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்த முனைந்துள்ளது:-

- நார்வே பல்கலைக்கழகம்
- அமெரிக்க ஐக்கிய நாட்டின் சாப்மேன் பல்கலைக்கழகம்
- புதுடெல்லி, சர்வதேச சட்ட இந்தியக் கழகம்
- நேப்பிள்ஸ் பல்கலைக்கழகம் (II)
- அமெரிக்க ஐக்கிய நாட்டின் கோன்சாகா பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி

தமிழ்நாட்டில் தேசிய அளவிலான மிகச் சிறந்த சட்டக் கல்வி வழங்கும் பொருட்டு 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி, மாநிலச் சட்டம் மூலம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி, சட்ட அறிவினை போதிப்பதையும், கற்பதையும், தேசிய வளர்ச்சியில் சட்டத்தின் பங்கினை மேம்படுத்துவதையும் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுக்காவில், 25 ஏக்கர் வளாகத்தில், 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி கட்டப்பட்டுள்ளது.

இச்சட்டப் பள்ளி 2013–2014–ஆவது கல்வியாண்டு முதல் செயல்பட தொடங்கியுள்ளது. அப்பள்ளியில் ஐந்தாண்டு பி.ஏ., எல்.எல்.பி (சீர்மிகு) சட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. 2013–2014 ஆவது கல்வியாண்டில் ஐந்தாண்டு

பி.ஏ., எல்.எல்.பி (சீர்மிகு) சட்டப்படிப்பிற்கான இடஒதுக்கீடு மற்றும் சேர்க்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு :-

| | அகில இந்திய அடிப்படையில் | தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள் | அயல்நாடு வாழ் இந்தியர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஒதுக்கீட்டு இடங்கள் | **45** | **45** | **10** | **100** |
| நிரப்பப்பட்ட இடங்கள் | **35** | **43** | **6** | **84** |

தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் இடங்கள் தமிழ்நாடு மாநில இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி நிரப்பப்படுகின்றன. நடப்புக் கல்வியாண்டான **2014–2015** முதல் சட்டப் பள்ளியில் **100** இடங்களுடன் ஐந்தாண்டு பி.காம்., எல்.எல்.பி (சீர்மிகு) சட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகிறது.

**2013–2014**–ஆவது நிதியாண்டில் சட்டப் பள்ளிக்கு தமிழ்நாடு அரசு ரூ.**5.34** கோடி மானியம் வழங்கி உள்ளது.

**சான்றுறுதி அலுவலர்கள்**

1952–ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி (மையசட்டம் 53/1952) முறையாவணங்களைச் சான்றொப்பமிடும் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். 01.01.2014 அன்று உள்ளபடி இந்த அரசால் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்தப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுபவர்களின் எண்ணிக்கை 1527 ஆகும்.

**ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு**

1965ஆம் ஆண்டில் மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம், சட்டச் சொற்களை உருவாக்கி, சட்டச் சொல் அகராதியை வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழி பெயர்ப்பதற்காகவும், அரசால்

அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைத்துருவாக்கப்பட்டது.

மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத்துறையின் ஒரு பிரிவாக **1992–**ஆம் ஆண்டு சட்டத்துறையுடன் சேர்க்கப்பட்டு, சட்டத்துறை கூடுதல் செயலாளரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இத்துறையின் கீழ் இயங்கி வந்த மற்றொரு பிரிவான, தமிழ்ப் பிரிவானது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் சட்டமுன்வடிவுகள், சட்டங்கள் மற்றும் அவசரச் சட்டங்களை மொழிபெயர்க்கும் பணியினை மேற்கொண்டு வந்துள்ளது. ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு மற்றும் தமிழ்ப் பிரிவால் மேற்கொள்ளப்படும் பணிகள் ஒரே தன்மையுடையதாய் இருப்பதாலும், அதிக அளவிலான பணித்திறனை பெறும் நோக்குடனும், மொழிபெயர்க்கும் பணியினை அதிக அளவில் செய்யவும், மொழிபெயர்ப்புப் பணியினை மேற்கொள்ளும் மொழிபெயர்ப்பு அலுவலர்களின் மீது

சிறந்த கட்டாளுகையை செலுத்துவதற்காகவும், இத்துறையின் கீழ் இயங்கி வரும் தமிழ்ப் பிரிவினை மேற்சொன்ன ஆட்சி மொழி (சட்டப்) பிரிவுடன் இணைப்பதென்று முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே தமிழ்ப்பிரிவில் பணியாற்றி வரும் அலுவலர்களை ஆட்சி மொழி (சட்டப்) பிரிவில் பணியாற்றி வரும் அலுவலர்களுடன் இணைத்து, ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு, சட்டத்துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இது, மையச் சட்டங்களையும், சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்படும் சட்டமுன்வடிவுகள், சட்டங்கள் மற்றும் அவசரச் சட்டங்கள் உள்ளடங்கலான மாநில சட்டங்களையும் தமிழில் மொழிபெயர்த்து வருகிறது. மையச் சட்டங்களை மொழி பெயர்த்து புத்தக வடிவில் அச்சிடுவதற்கான செலவினை, மைய அரசு ஏற்றுக்கொள்கிறது. மாநில சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை

மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. மையச் சட்டங்களை மறுபதிப்பு மற்றும் மறுவெளியீடு செய்யும் இனங்களில், விற்பனையின் வாயிலாகக் கிடைக்கும் வருவாய் மாநில அரசுக்குச் சேர்வதால் அச்சிடும் செலவினை, மாநில அரசே ஏற்கவேண்டும் என மைய அரசினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**மாநில சட்ட ஆணையம்**

மாநில சட்ட ஆணையம் திருத்தியமைக்கப்பட்டு, ஜார்கண்ட் மாநில உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி, நீதியரசர் திரு.N.தினகர் அவர்கள் அந்த ஆணையத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்த மாநில சட்ட ஆணையத்தின் காலமானது, இதன் தலைவர் பதவியேற்ற நாளிலிருந்து மூன்றாண்டு கால அளவிற்கு இருக்கும். நீதியரசர் திரு. N.தினகர் அவர்கள் 10.2.2014 அன்று இந்த ஆணையத்தின் தலைவராக பதவியேற்றார். திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தில், சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர்

திரு.T.சுதந்திரம் மற்றும் ஓய்வு பெற்ற சட்டத்துறை கூடுதல் செயலாளர் திரு.R.விவேகானந்தன் ஆகியோர் முழுநேர உறுப்பினர்களாகவும், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகள் திரு.R.தயாளன் மற்றும் திரு.R.முனிரத்தினம், ஆகியோர் பகுதி நேர உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் முழுநேரஉறுப்பினர்-செயலாளராக ஓய்வு பெற்ற சட்டத்துறை கூடுதல் செயலாளர் திரு.R.கதிர்வேல், அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாநில சட்ட ஆணையத்தின் செயற்பணிகளானது ஆங்கிலேய ஆட்சியின் போது இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் மற்றும் அதற்குப் பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் ஆய்வு செய்வதாகும். மேலும் இவ்வாணையத்தால் ஆய்வு செய்யப்பட்ட அந்தச் சட்டங்கள் இன்றைய சூழ்நிலைக்குப் பொருந்தத்தக்கதாக உள்ளதா அல்லது இல்லையா என்பது பற்றியும் தனது கருத்தினை

அளிக்கும். மேலும், அந்தச் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை அரசுக்கு வழங்கும். உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் பல்வேறு முடிவுகளுடன் மேற்சொன்ன சட்டங்கள் உடன்பட்டிருக்கிறதா என்பது பற்றியும் சட்ட ஆணையம் ஆய்வு செய்து அந்தச் சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றி அரசுக்கு அறிவுறுத்தும். மேலும், மாநில சட்ட ஆணையம்,–

(அ) தற்போதுள்ள சட்டங்களில் உள்ள குறைகளை நீக்குவதற்கு பொருந்தத்தக்க மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும்;

(ஆ) பொருந்தத்தக்கதாகவுள்ள சமூக, பொருளாதார, சட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனையை வழங்கும்;

**(இ)** மாநிலங்களுக்கிடையேயான உறவுகள் மற்றும் மைய–மாநில அரசு உறவுகளுக்கான வழிவகைகள் பற்றிய ஆலோசனையை வழங்கும்;

**(ஈ)** நீதி நிர்வாகச் சீர்திருத்தங்கள் அடிப்படையிலான சிறந்த மற்றும் உகந்த நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கும்; மற்றும்

**(உ)** மாநில சட்டங்களுக்கு மட்டுமில்லாமல், இந்த மாநிலத்திற்கு பொருந்தும் வகையிலிருக்கும் மையச் சட்டங்களுக்கும் மாற்றமைவுகள் அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும்.

*****

**2014–2015ஆம் ஆண்டுகளுக்கான பகுதி–II(புதிய) திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல்**

**(ரூபாய் இலட்சத்தில்)**

| வ.எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | | | 2014–2015–இல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவு | தொடராச் செலவு | மொத்தம் | வருவாய் கணக்கில் செலவு | மூலதன கணக்கில் செலவு | கடன் கணக்கில் செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | **தலைமைச் செயலகம்** சட்டத்துறை தொகுப்பு – 1 நூலகத்தினை நவீனப்படுத்துதல் | - | 1.65 | 1.65 | 1.65 | - | - | 1.65 |
| 2 | **சட்டக் கல்வி** தொகுப்பு – 1 அரசு சட்டக் கல்லூரிகளுக்கு புத்தகங்கள் வாங்குதல் | – | 21.00 | 21.00 | 21.00 | - | - | 21.00 |
| 3 | திருச்சியிலுள்ள அரசு சட்டக் கல்லூரி பெண்கள் விடுதிக்கு ஒளிப்புகும் கூரையுடைய பல்நோக்கு கூடம் கட்டுதல் | - | 15.00 | 15.00 | - | 15.00 | - | 15.00 |

| வ.எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | | | 2014–2015–இல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவு | தொடரா செலவு | மொத்தம் | வருவாய் கணக்கில் செலவு | மூலதன கணக்கில் செலவு | கடன் கணக்கில் செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 4 | தொகுப்பு – 2 சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக்கல்லூரி கட்டிடத்தில் வழக்காடும் பயிற்சிக் கூடம் அமைத்தல். | - | 40.00 | 40.00 | - | 40.00 | - | 40.00 |
| 5 | திருச்சியிலுள்ள அரசு சட்டக் கல்லூரி பெண்கள் விடுதிக்கு சூரிய ஒளி தகடுகள் மூலம் மின்வசதி வழங்குதல் | - | 15.00 | 15.00 | 15.00 | - | - | 15.00 |
| 6 | **டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக் கழகம்** தொகுப்பு–1 தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக சுற்றுச் சுவரினை உயர்த்தியமைத்தல். | - | 20.00 | 20.00 | - | 20.00 | - | 20.00 |
| | **மொத்தம்** | - | 112.65 | 112.65 | 37.65 | 75.00 | - | 112.65 |

**எஸ்.பி.வேலுமணி,**

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.